உ

சிவமயம்

மெய்கண்ட தேசிகாய நம :

சிவஞான போதக் கருத்துரை விளக்கம்

நூன்முகம்

கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே.

பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களும் அநாதி நித்திய மென்பதையும் அவற்றின் இலக்கணங்களையும் பெத்த முத்திகளது பாகுபாடுகளையும் தெளிவாயுணர்த்துஞ் சமயம் சைவ சமயம் ஒன்றேயாம்.

இதனை முதலில் கயிலாயநாதன் கல்லாலடியின் கண் தக்ஷிணாமூர்த்தியாய் வேதாந்த பரமாசாரிய மூர்த்தியாய் வேதாந்தசார சூத்திர போதகமாகிய சிவஞானபோத புத்தக ஹஸ்ததாரியாய் அதன் பொருளுணரச் சின்முத்ராங்கித ஹஸ்தனாய் மௌனகுருவாய் வீற்றிருந்து வேதச் சிரப்பொருளுணர்த்த வல்ல வேதாந்த சாஸ்திராதிகாரிகளாய் வந்த சநகாதியர் நால்வர்களை நோக்கி திவ்ய ஞானக்கண்ணினால் நிரீக்ஷித்து மோனநிலையில் நின்ற அந்நிலையை அவர்கள் உணருமாறு உண்ணின்று உணர்த்தி அந்நிலையில் நீங்காது நிற்கும் வகையை அருளி அவர்களைப் போக்கித் தான் அந்நிலையினின்று நீங்கினான்.

பின்னர் வேதாந்தபரமாசாரியராகிய தக்ஷிணாமூர்த்தி கயிலையின்கண்ணிருந்து நோக்கிய தக்ஷிணதிக்கே புண்ணியத் திறமாகிய சிவபுண்ணியம் வளர்ந்தோங்கும் நல்லெல்லையாமென்று திருவுளத்துட்கொண்டு அக்கயிலையைவிட்டு அந்த தக்ஷிண திக்காகிய அவ்வெல்லையில் முத்திதுறையாய் விளங்கும் திருப்பெருந்துறையில் குருந்தடியின்கண் மேலேசொல்லிய சிவ ஜீவ ஐக்கிய சிவானந்தானுபவ நிலை குருந்துவிட்டு எங்குந் தழைத்தோங்குமாறு அக்குருந்தடி மூலத்துல் சித்தாந்த சிவாசாரிய மூர்த்தியாய் ஆகமாந்தசார சிவஞானபோத புஸ்தக போதகாசாரியாய், மோன நிலையினின்று ஓதக்கருதாது திருவாக்கான் ஓதி

யருளும் உபதேசகராய் வீற்றிருந்து "பொற்பணிபோல் அபேதப் பிறப்பிலதாய் இருளொளிபோற் பேதமும் சொற்பொருள்போல் பேதா பேதமும் இன்றி, வேதசிவாகமங்களாகிய பெருநூலிற் சொன்ன சரியை கிரியையாகிய "அறத்திறனால் விளைவதாய் உடலுயிர், கண்ணருக்கன் அறிவொளிபோற்பிரிவரும் அத்துவிதமாகும்" சைவ சித்தாந்தத்திறத்தை ஓதுதற்குரிய அதிகாரியாய்த் தம்மையே நோக்கும் நோக்குடையராய்வந்த வாதவூரடிகளை அருள் நோக்கால் நோக்கி அன்புருவாக்கி சிவஞானபோதத்தைத் தந்து அந்நூலின்கண் சிரவணமுறையான் உணரவரும் காட்டுமுபகாரம் காணுமுபகாரம் என்னும் இருவகை உபகாரங்களையும் சிந்திக்கும் சிந்தனையைத் தந்து அச்சிந்தனை வழியானே தெளியவரும் தெளிவால் சிவமாக்கி, சிவமாக்கிய அந்நிலையில் கூடிவரும் நிட்டையில் அடிமைகொண்டு அவரேயாய் நின்றனர்.

இதனால்சிவபெருமான் கல்லாலடியின்கண் குருமூர்த்தியாய் வந்து சநகாதியர்களுக்கு அநுக்கிரகித்த நிலைதான் அவர்களேயாய் நிற்கும் வேதாந்த மோன நிலையென்றும் குருந்தடியின்கண் குருமூர்த்தியாய் வந்து வாதவூரடிகட்கு அநுக்கிரகித்த நிலை அவர் தானேயாய் நிற்கும் சித்தாந்த அடிமை நிலையென்றும் சித்தாந்த நுண்ணுணர்வுடையார் உணர்வர்.

இவ்வுண்மைகளை நன்குகப் பிரமாண முகத்தானும் இலக்கண முகத்தானும் அநுபவமுகத்தானும் பிரகாசப்படுத்தும் நூல்கள் சித்தாந்த சாத்திரங்கள் எனப்படும் திராவிட சாத்திரங்களாகிய பதினான்காம்.

அவை திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், இருபா இருபஃது, உண்மை விளக்கம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம்.

இப்பதினான்கையுங்கொண்டு பூர்வ பக்ஷிகளாற் கூறப்படும் (1) சங்கற்பங்களையெல்லாம் நிராகரணஞ் செய்து, (2) உண்மை நெறியை விளக்கமாக வுணர்ந்து, (3) அந்நெறியில் நெஞ்சைத் தூதாக விட்டு, (4) பஞ்சாக்கரமாகிய கொடிக்கவியை நாட்டி, (5) பஞ்சாக்கரப்பொருளாய் விளங்கும் பரசிவமாகிய நடராஜமூர்த்தியைப் போற்றிப் பஃறொடையாற் போற்றி. (6) அந்நட

ராஜ மூர்த்தியாகிய குருமூர்த்தியை விஞவென்பாவால் திரிப தார்த்த லக்ஷணங்களை விஞவி, (7) திருவருட்பயஞல் விஞவிய திரிபதார்த்த லக்ஷணங்களின் பயனுணர்ந்து, (8) உண்மை விளக்கத்தால் அப்பயனுள்ளிருக்கும் உண்மை விளக்கமாய், (9) இருபா விருபஃதால் சிவ என்னும் இருபகுதிகளேயும் உணர்ந்து, (10) சிவப்பிரகாசத்தால் சிவம்பிரகாசிக்கப்பெற்று, (11) சிவ ஞான சித்தியால் சிவஞானம்போய் சிவஞானசித்தி வரப்பெற்று, (12) சிவஞானபோதத்தால் சிவஞானசித்தியாய் தன்போத நிகழ்ச்சியெல்லாம் சிவஞானபோத நிகழ்ச்சியேயாய், (13) திருக் களிற்றுப்படியாரால் அச் சிவஞானபோதச் செல்வ மிகுதியால் சிவோஹம் என்னும் களிற்றின்மேலேறி பவனி வந்து, (14) திரு வுந்தியாரால் அச்சிவநிலையின் சோபானக்கிரமத்தால் குஞ்சித பாதத்தின் கீழிருந்து அரசாட்சிசெய்து என்றும் அடிமை குலையாது பேரானந்தமுற்றுப் பிறப்பிறப்பிலழியாது கும்பிட்டிருக்கும் பெருவாழ்வோடிருக்கலாம். சுபம் !

கா. ஆலால சுந்தரன்

நூல்

முதற்சூத்திரம்

ப தி நி ச் ச ய ம்

அவன் அவள் அதுஎனும் அவைமூ வினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
அந்தம் ஆதி என்மஞர் புலவர்.

(கருத்துரை) சங்கார காரணனாயுள்ள முதற்கடவுளேயே முதலாகவுடைத்து இவ்வுலகம் என்பதனை உணர்த்துதல்.

(விளக்கம்) உலகம் என்பது மாயா காரியமாயுள்ள **தநு கரண புவன போகங்களாகக்** காணப்படுவதேயாகும். காரிய மாகிய இவ்வுலகிற்குக் காரணமாயுள்ள **மாயை—சுத்தமாயை அசுத்தமாயை சுத்தாசுத்தமாயை என மூவகைப்படும்.** மாயை

மூன்றுவகைப்படவே அவற்றின் காரியமாகிய உலகமும் மூவகைப்படும். அம்மூவகை உலகினையும் சங்கரிப்பவனாகிய மஹா சங்கார கடவுளைத்தான் ஈண்டு உலகிற்கு முதற்கடவுள் என்று சொல்லியதாகும். அச்சங்காரக் கடவுள் பரசிவன் என்னும் பேருடையான் என்பதனை உணர்த்துதலாம்.

இரண்டாஞ்சூத்திரம்

பாச நிச்சயம்

அவையே தானே யாயிரு வினையில்
போக்கு வரவு புரிய ஆணையில்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

(க-ரை) இவ்வுலகம் புனருற்பவப்பட்டு **வருமாறு** உணர்த்துதல்.

(வி-ம்) இவ்வுலகிற்கு முதற்கடவுள் சங்கார கருத்தா என்று சொன்னால் அது எங்ஙனம் பொருந்தும்? உலகத்தைப் படைக்கின்றவன் முதற்கடவுள், அதனைக் காக்கின்றவன் இரண்டாங்கடவுள், சங்கரிக்கின்றவன் மூன்றாங்கடவுள், அங்ஙனமிருக்க மூன்றாவது கடவுளை முதற்கடவுளாகச் சொல்லுவது எங்ஙனம் பொருந்தும்? பொருந்துமெனின், அச்சங்கார கருத்தாவினின்றும் இவ்வுலகம் எப்படி மீளவும் உண்டாகும் என்று அவாய் நிற்றலின், அவ்வவாய் நிலைபற்றி அச்சங்கார கருத்தாவினின்றும் உலகம் **மீளவும் உண்டாதும்** முறைமையை வகுத்து உணர்த்துதலாம்.

மூன்றாஞ்சூத்திரம்

பசு நிச்சயம்

உளதில தென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

(க-ரை) ஆன்மப்பிரகாசம் இத்தன்மைத்தென்று உணர்த்துதல்.

(வி - ம்) உலகம் என்பது உயிரில் பொருள் உயிருள் பொருளென இருவகைபாகக் காணப்படுதலின், ஈண்டு உயிர் உள் பொருளெனப்படும் ஆன்மாவாகிய பசுக்களது உண்மையைக் கூறுதல் என்க.

எனவே, மண் முதலாகிய பஞ்சபூதமயமாயும், அப்பூதங்களாலாகிய தநு கரண புவன போகங்களாயும் உள்ள உலகம் - உயிரில் பொருள் எனப்படும் **அசேதன உலகமாம்.** அத்தநுவாதிகளைக்கொண்டு சுக துக்கங்களையும் சுவர்க்க நரகங்களையும் மாறி மாறிப் பன்முறையும் அனுபவித்துவரும் இயல்புடையனவாயுள்ள உலகம் உயிருள் பொருள் எனப்படும் **சேதன உலகமாம்.**

இவ்விருவகை உலகத்துள் காணப்பட்ட உலகம் அசேதனவுலகம்; காணப்படாதது சேதனவுலகம். இங்ஙனமிருக்க, உயிருள் பொருளாகிய சேதனம் உயிரில் பொருளாகிய அசேதனத்தோடு சம்பந்தப்பட்டு வேற்றுமையின்றி ஒற்றுமைப்பட்டு நிற்றலால் சேதனவுலகம் வேறாகக் காணப்படாததாயிற்று.

ஆகவே, சிலர் **ஆன்மா (உயிர்)** என்பது வேறொன்றில்லை காணப்படுந் **தேகந்**தான் என்றும்;

சிலர் அது சடம், உயிரன்று, தேகத்தின்கண் உள்ள மெய் வாய் கண் மூக்குச்செவி என்று சொல்லப்பட்ட இந்திரியங்கள் பரிசாதி விஷயங்களை அறிகின்றபடியால் **இந்திரியங்கள்**தான் என்றும்;

சிலர் இந்திரியங்கள் அறியுந்தன்மை யுடையனவன்று, என் புத்தி என் சித்தம் என்று சொல்லுகின்றோமல்லவா, அவைகள் தான் இந்திரியங்களின் வழியாய்ச் சத்தாதி விஷயங்களை அறிகின்றனவாகலான் **அந்தக்கரணங்கள்** என்றும்;

சிலர் இத்தூலதேகத்துள் சூக்குமதேகம் ஒன்றிருக்கின்றது, அது இல்லையாயின் அந்தக்கரணங்கள் ஒன்றையும் அறியா ஆகலான் அச்**சூக்குமதேகந்**தான் என்றும்;

சிலர் சுழுத்தி (நித்திரை)யில் இந்திரியங்கள் கரணங்களைப் போல் அடங்கிக் கிடப்பதன்றி பிராணவாயு தொழிற்படலால் **பிராணவாயு**தான் என்றும்;

சிலர் இங்ஙனங்கூறி வந்த தேகமுதலியவைகளும் அல்ல, ஆன்மா வேறு இல்லை என்பதும் அல்ல, பிரமம் என்று சொல்லப்

பட்ட ஒரு பொருள் சித்துப் பொருளாகலான் அப்பிரம்மந்தான் என்றும்;

சிலர் பிரமம் என்னும் சித்துப்பொருள் உடம்பினுள் இருப்பதாயினும் இந்திரியங்கள் கரணங்கள் என்பவற்றுள் ஒன்றுகுறையுமாயின் ஒரு பொருளையறியும் சக்தியில்லை. எல்லாங்கூடியவழி ஒரு பொருளை அறியும் சக்தியுடைத்து; ஆகவே, அனைத்துங் கூடிய **சமுதாயமே**தான் என்றும்;

பலபடக் கூறுவதனுல் அவையெல்லாம் அறிவுடையனவா அல்லவா என்று நூலிற் கூறப்படும் அளவைடானும், அநுபவ வாயிலாகக் காணப்படும் அளவையானும் ஆராயும் ஆராய்ச்சியின் விசேடத்தான் அவையெல்லாம் ஆன்ம இலக்கணம் உடையன **அல்ல.** இவைகளுக்கு வேருய் இவை**யாவும் அறியவல்லதே ஆன்மா** என்று பிரகாசமாய் அறிதலாம்.

எனவே, என்பதி, என் ஊர், என் மாடு என்று சொல்வது போல என்னுடம்பு, என் கண், என்மனம் என்று சொல்வதேயன்றி யான் கை, யான் உடம்பு, யான் கண், யான் மனம் என்று உலகின்கண் வழங்குதல் இல்லை.

என்பதி என்மனை என்ருல் அந்தப்பதியும் அந்த மனையும் சொன்னவனுவானு? ஆகான். அவன் வேருகவே யிருந்து தனக்கு வேருகவுள்ள பதி முதலியவற்றை எனதென்று சொல்லுகிருன். அதுபோல உடம்பு முதலியவற்றை யான் உடம்பு, யான் கண் என்று சொல்லாமல் என் உடம்பு என் கண் என்மனம் என்றுசொல்கின்றதனுல் உடம்பு இந்திரியம் கரணம் பிராணவாயு முதலிய எல்லாமும் யான் என்பவனுக்கு வேறென்று , அந்த யான் என்பவன் தனக்கு வேருயிருக்கின்ற உடம்பு முதலியவற்றைத் தனக்கும் அவைகட்கும் உள்ள ஒற்றுமை விசேடத்தான் வேற்றுமையின்றி, எனதென்று கூறுவதேயன்றி உண்மையில் அவையெல்லாம் அறிவுடைய ஆன்மா அல்ல. இவைபோலவே பிராணவாயுவையும் கருவி கரணங்கள் எல்லாங் கூடிய சமுதாயத்தையும் பிரமத்தையும் ஆன்மா என்று கூறுதல் ஆகாது.

ஆகவே, மாயா காரியங்களான் செய்யப்பட்டதாகிய சூத்திரப்பாவைபோல் உள்ள உடம்பினிடத்தே கூடியிருந்து அவற்றிற்கு வேருய் அப்போதைக்கு அப்போது அடுக்குங்காரியங்

களுக்கு ஏற்றவாறு உடம்பு முதலியவற்றைச் செயற்படுத்தி அவைகளால் அடையப்படும் பயன்களை அனுபவித்து உடம்பு முதலியவற்றில் பிரகாசமாயிருந்து வ்வகரித்துவரும் **அறிவே ஆன்மா** என்று உணர்த்துதலாம்.

பிரமாணவியல் முற்றிற்று

நான்காஞ்சூத்திரம்

பசு இலக்கணம்

அந்தக் கரணம் அவற்றினொன் றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.

(க-ரை) ஆன்மா உடம்பு முதலியனபோல அறிவற்ற பொருளன்று, அறிவுடைப்பொருள் என்று ஆராய்ச்சியின் வழியான் அறியவரினும் அவ்வான்மா செம்பிற் களிம்புபோல மூல மலம் எனப்படும் ஆணவ மலத்தோ டுடனாயிருத்தலின் தன்னியற்கையறிவால் ஒரு பொருளையும் உணருமாறின்றிக் கண் முதலிய கருவிகளையும் மனமுதலிய கரணங்களையும் கூடிநின்று உணருந்தன்மையதாயிற்று என்று உணர்த்துதல்.

(வி-ம்) அறிவு வடிவமாயிருப்பது ஆன்மா என்றும் அவ்வான்மாவினிடத்தில், செம்பினிடத்தில் களிம்பானது பதிதாக வந்து கூடாமல் செம்பு உள்ள அன்றே அதனுடனாய்க் கலந்திருப்பதுபோல, ஆணவமலம் கலந்திருப்பது என்றும், அதனால் தன்னியல்பான் அறியுஞ்சக்தி உடைத்தானதில்லை என்றும் அதனால் அறிதற்குக் கருவியாயுள்ள பொறிபுலன் கரணங்கள் கூடியவழி ஒன்றினை அறியும் சக்தியுடைத்தென்றும், அந்தக்கரணங்களைக் கூடியவிடத்து சாக்கிரம் முதலிய ஐந்தவஸ்தைகளை உடையதாய் நிற்பது என்றும் உணர்த்துதலாம்.

இந்நான்காஞ்சூத்திரம் மூன்றாஞ்சூத்திரப் பொருளையே அனுவதித்துக் கூறியதென்க.

ஐந்தாஞ்சூத்திரம்

பாச இலக்கணம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்
களந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாம் தம் உணர்வின் தமியருள்
காந்தம் கண்ட பசாசத் தவையே.

(க - ரை) அவ்வான்மாக்களிடத்து முதற்கடவுளாகிய பரசிவன் உபகரிப்பதாகிய உபகாரத்தை உணர்த்துதல்.

(வி - ம்) ஆன்மா பொறிபுலனாதிகளோடு கூடினாலன்றி ஒரு விடயத்தையும் அறியாது என்று கூறினும் பொறிபுலன்களின் வழியாய் விடயங்களை யறிவதுவும் அவ்விடயங்களைப்பகுத்து அனுபவிபபதுவும் ஆன்ம வேயன்றி பொறிபுலனாதிகள் அறிவனவும் அனுபவிப்பனவும் அன்று.

எனவே, ஆன்மா ஒருவிடயத்தை அறியவேண்டின் அவ்வான்மா அதனை அறிதற்குப் போறிபுலன் கரணாதிகள் துணையாயிருப்பனவேயன்றி ஆன்மாவிற்கு அறிவிக்குஞ் செயலை உடையன அல்ல. அந்த அறிவித்துஞ் செயலைச்செய்பவன் பரசிவனாகிய முதற்கடவுளேயாமென்று அதன் முறைமையை உணர்த்துதலாம.

இதனால் பரசிவன் ஆன்மாவிற்கு உணர்த்துவதாகிய உபகாரத்தை உடையவன் என்றும் அவ்வுபகாரத்தால் ஆன்மா எந்த விடயங்களையும் உணரும் தன்மையது என்றும், அவ்வாறு சிவன் உணர்த்த ஆன்மா விடயங்களை உணருங்காலத்து பொறிபுலன் கரணாதிகள் துணைக்கருவிகளாய் நிற்கும் அளவின என்றும உணர்த்தியவாறும்.

இவ்வுணர்ச்சியான் உணர்த்தவுணரும் தன்மையதாகிய ஆன்மாவுக்குப் பரசிவன் உணர்த்தும் உபகாரத்தைச செய்ய அவ்வான்மா விடயங்களை அறிகின்றதே அன்றி, பொறிபுலன் கரணாதிகள் உணர்த்துஞ் செயலைச் செய்ய அவற்றான் விடயங்களை அறிகின்றது அல்ல.

எதுபோலெனின், ஒரு பொருளை அறிதற்குக் கண் இன்றி யமையாததாயிருப்பினும் இருள் வந்த காலத்து அவ்விருளைப் போக்கி அவ்விருளால் மறைந்து கிடக்கும் பொருளை அறிவிக்கின்றதில்லை. சூரியனோ அன்றித் தீபமோ அவ்விருளைப் போக்கி அப்பொருளை யறிவிக்கின்றது; அங்ஙனம் அவை அறிவிக்க ஒருவன் அறிகிறான்; கண்ணோ எனின் அவன் அறிகின்ற காலத்துத் துணையாய் நிற்பது ஒன்றேயாம் என்று நிச்சயித்துச் சிவனது உபகாரத்தை உணரவேண்டும்.

ஆறாஞ்சூத்திரம்

பதி இலக்கணம்

உணர்உரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிறன் அல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் உலகே.

(க - ரை) உணர்த்தும் உபகாரத்தையுடைய பரசிவன் எனப்படும் பதியினது இலக்கணம் உணர்த்துதல்.

பதி இலக்கணமாவது சிவ சத்து என்பதாம். எனவே, **பாசஞான பசுஞானங்களால் அறியப்படாமையின் சிவம்** எனவும், பதி ஞானத்தால் **அறியப்படுதலின் சத்து** எனவும் சொல்லப்படும்.

இனிப் **பாசஞான**மாவது :—பிரபஞ்ச விஷயமாகக் காணப்படும் அவன் அவள் அது ஆகிய பதார்த்தங்களை ஆன்மா சுட்டி உணர்வதற்குத் துணைக் கருவிகளாயுள்ள **பொறிபுலன் கரணாதிகளாதும்.** இவை சுட்டிறந்த பொருளைக் காணுதற்குத் துணையன்று.

இனிப் **பசுஞான**மாவது :—கருவி கரணாதிகளாகிய பாச ஞானங்களோடு சம்பந்தப்பட்டுப் புறவிடயங்களை இது இது என்று சுட்டியறியுந் தன்மை யுடையதாய் இருக்கும் **அறிவாதும்.** இப் பசு ஞானமானது புறம்பே சுட்டிக் காணப்படும் சடப் பொருள்களை அறியுந் தன்மைத்தேயன்றித் தன்னுள்ளத்தே நின்று தன்னறிவுக்கறிவாய் உணர்த்துந் தன்மையினையுடைய சுட்டிறந்த பொருளைக் காணுந் தன்மை யுடையதன்று.

இனிப் பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும் அறியப் படாதது என்று இருவகை ஞானத்தையும் விளக்கிப் பதிஞானத் தால் அறியப்படும் சத்தாயுள்ள சிவமென்று பதியிலக்கணத்தை யுணர்த்துதலாம் என்க.

எனவே, பொறிபுலன் கரணாதிகளோ ஆன்மா தன்னறி விஞல் ஒன்றை அறியுமிடத்தது துணைக் கருவிகளாயுள்ளன. அவ்வளவேயன்றி அறிவுடையன அன்று. ஆகவே, அவை அசத்தாயிற்று.

ஆன்மாவோ, அறிவு வடிவாயிருப்பினும் அக்கருவிகளைத் துணையாகக்கொண்டு ஒரு பொருளை அறியுந்தன்மையுடையது. ஆகவே, ஆன்மா ஒரு பொருளையும் சுதந்தரமாய் அறியுந்தன்மை உடையதல்ல என்றாயிற்று.

பதியோ பாச பசு ஞானங்களால் அறியப்படாதது.

இவ்வாறு கருவிகளுக்கும் ஆன்ம அறிவிற்கும் அதீதமாய் நிற்கும் சிவம் ஆன்ம அறிவுக்குள் அறிவாய் நின்று உணர்த்தும் உண்மையை உணர்ந்த ஆன்மாவானது, தன்னறிவினை அப்பதி அறிவில் அடக்கி அதுவாய் நிற்றலாகிய ஒற்றுமையில் ஒற்றுமைப் பட்டு நின்று உணரும் அனுபவஞானத்தைப் பெறுமாயின் அவ் வனுபவ ஞானமாகிய பதிஞானத்தால் அறியப்படுவது சத்தா யுள்ள சிவம் என்றுணர்தலே பதியிலக்கணம் எனப்படும்.

இவ்வுண்மை விளங்கவே **வாக்குமனாதீதம்** என்று முன்னரும் **வாக்குமனாதீதகோசரம்** என்று பின்னரும் கூறுவர்.

எனவே, பாசஞான பசு ஞானங்களுக்கு அதீதமாகிய அச் சிவம், பதிஞானத்தால் பசு ஞானத்தை யடக்கி அதுவாய் நிற்றலைச் செய்வதாகிய அனுபவ ஞானத்திற்குக் கோசரமாம் என்று சித்தாந்த ஞானிகள் கூறுவர் என்க.

இங்ஙனங் கூறிவந்த ஆறுசூத்திரக் கருத்துரைகளின் கருத்துக்கள் முறையே இனிது விளக்குவாம் :—

சித்தாந்தத்தின் முறை :— பதி பசு பாசம் என்னும் முப் பொருளும் வேறு வேறு காணப்படுமாறின்றி ஒன்றாய்க் காணப் படுதலின் அம்மூன்றும் வேறு வேறென்றும், அங்ஙனம் இருக் கும் அவை ஒன்றாய்க் காணப்படுதற்குக் காரணம் வியாபகம் வியாத்தம் வியாப்பியம் என்னும் இவ்விலக்கணத்தான் அறிய வரும் அத்துவித இலக்கணந்தான் என்றும் பிரகாசமாய் அறியச் செய்வதேயாம்.

இனி அம்முறையை இனிது விளக்குவாம். **வியாபகம்** என்பது **கடல்**, **வியாத்தம்** என்பது அதிலுள்ள **நீர்**, **வியாப்பியம்** என்பது அதிலுள்ள **உப்பு**. அம்மூன்றனுள் கண்ணால் **பிரத்தியக்ஷ**மாய்க் காணப்படுவது - பெருக்கமாயுள்ள **நீர்**, **சொல்** லளவையால் அறியப்படுவது - **கடல்**, உண்ணும் **அநுபவ**த்தால் உணரப்படுவது **உப்பு**.

இம்முறைபோல் **பிரத்தியக்ஷமாய்க்** காணப்படுவது - பெருக்கமாய்க் காணப்படும் உயிர்கள் எனப்படும் **பசுக்கள்**. நூல்களாகிய சொல்லளவையால் **(பிரமாணங்களால்)** அறியப்படுவது - சிவமெனப்படும் **பதி**. பசுக்களிடத்துள்ள அறிவினை மயக்கி, அவற்றை அறியாமையுட்படுத்தி ஏகதேசப்பட்டு அறியச் செய்வதாகிய **அனுபவத்தால்** உணரப்படுவது - **பாசம்**.

இங்ஙனம் கூறிவந்த முறையான் கடல் நீர் உப்பு என்னும் மூன்றும் வேறு வேறு என அறியவரினும் ஒன்றாய்க் காணப்படுமாறுபோல, பதி பசு பாசம் என்னும் மூன்றும் வேறு வேறு என அறியவரினும் ஒன்றாய்க் காணப்படுகின்றன வென்க.

நீர்ப்பெருக்கினைக்கண்டு கடலெனச் சொல்லவரினும், உலக வழக்கில் கடலைச் சொல்லிப் பின் நீரையும் அதன் பின் உப்பையும் சொல்லுவதுபோல, உயர்ந்தோராகிய சித்தாந்திகள் பதியை முன்னரும் அதன் பின் பசுவையும் அதன் பின் பாசத்தையும் எடுத்துக் கூறுவரென்க.

ஆகவே, சித்தாந்தமாகிய இந்நூலில் **முதற்சூத்திரத்தில்** சகம் பிறப்பு இருப்பு இறப்பாகிய முத்தொழிற்படுவதும் இயல்பினை யுடைத்தென்னும் அம்முறையை விளக்குமுகத்தானே கடவுள் தன்மை வெளிப்படலான் **கடவுளாவான் யதாசங்காரக் கடவுள்** என்பதை முன்னரும்,

உ - ம் **சூத்திரத்தில்** பிறப்பு இருப்பு இறப்பு என்னும் முத்தொழிற்பட்டு வருவதாகிய சரம் அசரம் எனப்படும் இவ்வுலகம் அநாதி ஆணவபாசத்தில் நின்றும் அநாதியே வெளிப்படுமாறின்றிப் பந்தப்பட்டுக்கிடப்ப அப்பந்தத்தினைச் சங்கரித்து அப்பாசத்தினின்றும் அவ்வுலகினைத் தோற்றுவித்துத் தனது சத்தியான் முத்தொழிற்படுத்துவன் அச்சங்காரக் கடவுளே யாமென்று அதனுண்மை வெளிப்படுத்து முகத்தானே அனைத்து அத்துவித இலக்கணம் வெளிப்படலான், அவ்வத்துவித **இலக்கணத்தைப்** பின்னரும்,

௩-ம் **சூத்திரத்தில்** அவ்வத்துவித இலக்கணத்தை உணர வேண்டியவன் ஆன்மாவேயாகலான் அவ்வான்மா இதுவல்ல இதுவல்ல என்று ஆராய்ச்சி முறையான் வெளிப்படுத்து முகத்தானே இதுவென்று வெளிப்படலான் **ஆன்மப் பிரகாசத்தை** அதன் பின்னரும்,

௪ம் **சூத்திரத்தில்** ஆன்மப்பிரகாசம் இத்தன்மைத்தென்று விளக்கு முகததானே அவ்வான்மா ஆணவாதி மும்மல சம்பந்தம் உடையது என்று வெளிப்படலான் ஆன்மா **சுதந்தரவுணர் வினன் அன்**றென்பதை அதன் பின்னரும்,

௫ம் **சூத்திரத்தில்** ஆன்மா சுதந்தர உணர்வினது அன்றென்று அம்முறையை விளக்கு முகத்தானே சுதந்தர உணர்வின னாகிய முதற்கடவுள் ஆன்ம அறிவுக்குள் அறிவாய் நின்று அறிவிக்க ஆன்மாக்கள் யாவையும் அறியுஞ்செயல் வெளிப்படலான் ஆன்மாக்களிடத்து **முதற்கடவுளது உபகாரம்** உபகரிக்கப்பட்டு வரும் முறையை அதன் பின்னரும்,

௬ம் **சூத்திரத்தில்,** உபகாரம் உபகரிக்கப்பட்டு வரும் முறைமை உணர்த்து முகத்தானே முதற்கடவுளாகிய பதி இன்ன இலக்கணம் உடையது என்று வெளிப்படலான் அப்பதி வாக்கின் சம்பந்தமாகிய **பாச ஞானத்தானும்** மனத்தின் சம்பந்த மாகிய **பசு ஞானத்தானும் அறியவராத அர்த்தன்** என்பதையும் அருட் சம்பந்தமாகிய பதிஞானததால் **அறிய வருபவன்** (கோசரிப்பவன்) என்பதையும் அதன் பின்னரும் கூறிவந்த முறைமையாம் என்க.

ஏழாஞ்சூத்திரம்

சாதித்தற்குரிய அதிகாரியின் இயல்பு

யாவையுஞ் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியா தசத்தில தறியா
திருந்திய அறிவுள திரண்டலா ஆன்மா.

(சூ - ரை) சித்தாந்தத்தில் எடுத்துக்கொண்ட முப்பொருளில் பாசத்தை அசத்தென்றும் பதியைச் சிவசத்தென்றும் கூறியதுபோல் ஆன்மாவைச் சத்தென்றாவது அசத்தென்றாவது கூறாமையினால் அதனை ஈண்டு எடுத்து உணர்த்துதல்.

(வி - ம்) பதியைச் சிவசத்து என்றதனால் பாச பசுக்களால் அறியப்படாதவன் என்னும் பொருளுடைத்து என்று

முன்னே கூறியிருத்தலான் எங்கும் வியாபித்துப் பிரகாசிக்கும் சூரியன் முன் எங்கும் பரவிக்கிடந்த இருள் மறைத்தலாகிய தன் செயலைக்காட்டாது அப்பிரகாசமாய்க் கிடக்குந் தன்மையைப் போலும், மெய்வெளிப்படுங்கால் பொய் அப்பிரகாசமாய் நிற்றல் போலும், சிவத்தின் முன் அப்பாசம் விளங்கி நில்லாது.

எனவே, இருளானது சூரியனை அப்பிரகாசப்படுத்தித்தான் பிரகாசிக்குந் தன்மையுடைய தல்லாததனால், இருளை அசத்தென்றும் சூரியன் அந்த இருளை அப்பிரகாசப் படுத்தித்தான் எங்கும் பிரகாசிக்கும் தன்மை உடைத்தாகலான் சூரியனைச் சத்தென்றும் அறியக்கிடத்தல்போல் சிவம் உணர்வுடைய சத்தென்றும் பிரபஞ்ச ரூபமாகிய பாசம் உணர்வல்லாத அசத்தென்றும் சொல்லவந்ததென்க.

இதனால் சூரியனுக்கு இருட்டையறியும் செயல் இல்லாதது போல், சிவனுக்குப் பாசத்தை அறிய வேண்டிய செயல் இல்லை என்றும், இருளுக்குச் சூரியனை அறியும் செயல் இல்லாதது போலப் பாசத்திற்குச் சிவத்தையறியும் செயல் இல்லை என்றும் அறிவுறுத்தியதாம்.

இனிச்சத்தாகிய சிவத்தையும் அசத்தாகிய பாசத்தையும் அறிவது ஆன்மா என்று அறியவருகின்றது; எதுபோலெனின் கண்போல் என்க.

எனவே கண் இருளாகாமலே இருளை அறிகின்றது. அது போலச் சூரியன் ஆகாமலே சூரியனை யறிகின்றது. ஆகவே கண் சூரியனுமல்ல இருளுமல்ல என்று துணியக்கிடத்தல்போல் ஆன்மா சிவமாகிய சத்துமல்ல, பாசமாகிய அசத்துமல்ல. மற்றென்னெனின் ஆன்மா சத்தினையும் அசத்தினையும் அறியும் அறிவுடைத்தாயிருத்தலால் சதசத்தாமென்று உணர்த்துதலாம்.

இவ்வுண்மை தோன்றவே ''இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா'' என்று சூத்திரம் கூறிற்று.

எட்டாஞ்சூத்திரம்

சாதிப்பதற்குரிய சாதனம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
டன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

(க - ரை) ஆன்மா கண்போல் அறிவுடைப் பொருள் என்றும், அதனால் சத்துப் பொருளையும் அசத்துப் பொருளையும் அறியுந்தன்மை யுடைத்தென்றும் மேலே கூறியதனால் அவ்வான்மா அசத்தாகிய கருவி கரணங்களான் விளங்கி அக்கருவி கரணங்களோடுகூடி, அசத்தாகிய விடயங்களையறிந்து நிற்கும் இயல்பினையுடைத்தாயிற்று.

அஃதேபோல் ஞானத்தினை உணரு முறைமையான் சத்தான் விளங்கி அச் சத்தோடுகூடி அந்தச் சத்தினை அறிந்து நிற்கும் இயல்பினையும் உடைத்து என்பதனை உணர்த்துதல்.

எனவே, ஆன்மா அசத்தாகிய விடயங்களையறிந்து அதுவாய் நிற்பதற்கு, அசத்தாகிய கருவி கரணங்கள் துணையாய் நிற்பதுபோல், சத்தாகிய சிவத்தோடு கூடி அதுவாய் நிற்பதற்கு அச்சிவமே, ஆன்ம அறிவினுள் நின்று யாவையும் உணர்த்தும் உபகாரத்தை மேற்கொண்டிருத்தலால், ஆன்மா அசத்தாய் நிற்கும் இயல்பினின்றும் நீங்கிச சிவமேயாய் நிற்றற்குரிய சாதனத்தையும் அசசாதன விசேடத்தான் உதிப்பதாகிய ஞானத்தினையும் ஆசிரியனுய் வந்து உணர்த்தி, அசத்தாகிய பாசசசார்பினை ஒழித்துத் தன்னருளைத் தந்து அவ்வருள் மயமாகவே நிற்கச் செய்யும். அங்ஙனஞ் செய்யுங்காலத்து அச் சிவசத்தாகவே நிற்குமென்று உணர்த்துதலாம்.

இனி **ஞானசாதனமாவது :—** ஆன்மாக்களுக்கு விஷயவுணர்ச்சி உண்டாதற்கும் அவ்வுணர்ச்சியான் விஷயானுபவம் வருவதற்கும், தநு கரண புவன போகம் என்னும் நான்கினையும் தந்ததுபோல, சிவஞானஉணர்ச்சி உண்டாதற்கும் அவ்வுணர்ச்சியான் சிவானுபவம் வருதற்கும் **சரியை கிரியை யோகம் ஞானம்** என்னும் நான்கு வகையாயுள்ள தவ சாதனங்களேயாம் என்க.

எனவே, **தநுவாகிய** சரீரச் சார்பால் விளையும் பாசச் சார்பை ஒழித்தற்குச் **சரியையும்**, மனமுதலிய **கரணச்** சார்பால் விளையும் பாசச் சார்பை **ஒழித்தற்குக் கிரியையும்** புவனச் சார்பால் விளையும் பாசச் சார்பை ஒழித்தற்கு **யோகமும், போகச்** சார்பால் விளையும் பாசச் சார்பை **ஒழித்தற்கு ஞானமும்** நியமிக்கப் பட்டன வென்க.

இந்த மெய்ம்மையாகிய தவ சாதனங்களுள் சரியை முதலிய மூன்றும் பிறவிதோறும் சிறிது சிறிதாய் நீக்கமின்றித் தொடர்ந்துவருமாயின் அத்தொடர்பானே பிறவிதோறும்

தொடர்ந்துவரும் இருவினைகளின் வழியானே அநாதியாய்ப் பந்தித்திருக்கும் மலமானது தளர்ச்சியடைந்து, ஆன்மாவின் நீங்குதற்குரிய பரிபாகமும், அப்பரிபாகத்தான் அருட்சத்தி பதியவருதலாகிய சத்திநிபாதமும் நிகழவரும். அவை வர தத்துவ ஞான உணர்ச்சியில் அவா உண்டாகும்.

சரியை கிரியை போகம் என்னும் இம்மூன்றும் முற்றுதலான் ஞானத்தின்கண் அவாவுண்டாகவே, அந்த ஞான சொரூபியாயுள்ள பரம்பொருள், அதுவரையில் ஆன்ம அறிவினுள் அறிவாய் நின்று விடய உணர்ச்சியைப் பிரகாசப்படுத்தி விஷயானுபவத்தை அனுபவிக்கச் செய்ததுபோல் செய்ய எண்ணாது, அவ்வான்மா கட்புலனால் தன்னைக் கண்டு தன்னாலேயே அந்த ஞானத்தினை உணர்ந்து தனது, சிவானந்தத்தைப் பெற, குருமூர்த்தியாய் வந்தருளும்.

விடயானந்தானுபவத்திற்குரிய விடய வுணர்ச்சியை அறிவினுள் அறிவாய் நின்று உணர்த்தி வந்ததுபோல், சிவானந்தானுபவத்திற்குரிய ஞான வுணர்ச்சியினை உள்நின்றுணர்த்தாது வெளியே கட்புலனால் காண குருமூர்த்தியாய் வந்து உணர்த்த வந்தது என்னையோவெனின், கூறுதும் :—

விடயானந்தானுபவத்திற்குரிய பொருள்கள் வெளியே உள்ளன. அவைகளோ; மல சம்பந்தம் உடையன. அம்மலமோ ஆன்மாவை விட்டு நீங்க வேண்டிய பகைப்பொருள் ஆகலான், அப்பகை ஆன்மாவை விட்டு ஒழிய அது நீங்கும் வகையான உபாயத்தை பரம்பொருளாகிய சிவம் உள்நின்று உணர்த்திவந்தது. இப்போது அப்பகையைப் போக்குதற்கான ஞானத்தை மெய்த்தவங்களாகிய சரியையாதிகள் கூட்டிற்று.

அந்த ஞானமோ, அருளினுள் இருப்பது. அவ்வருளோ சிவத்தினுள் இருப்பது. சிவத்தினுள்ளே இருப்பதாகிய அருளும் அவ்வருளினுள்ளே யிருப்பதாகிய ஞானமும் ஆன்மாவினுள்ளே வந்து அணுக வேண்டும். ஆன்மாவோ புறத்தே காணப்படும் பொருளை உணரும் உணர்வுடையதேயன்றி அகத்தே காணப்படும் பொருளைக் காணும் உணர்வுடையதன்று.

சிவமோ உள்நின்று யாவையும் உணர்த்தி வருதல்போல் புறத்தினும் உணர்த்திவரும். அன்றியும் தான் உண்ணின்று உணர்த்திவருவதை உணருமாறும் செய்யும். அஃதேபோல்

புறத்திலும் உணர்த்திவருவதை அவ்வான்மா உணருமாறும் செய்யும்.

இவ்வண்ணம் அகத்தும் புறத்தும் உணர்த்தும் செயலையும் அவையிற்றை உணர்விக்கும் செயலையும், சிவம் செய்யாதாயின் ஆன்மா ஒன்றையும் உணராது; உணர்ந்து அப்பொருள்களால் அடையப்படும் பயனையும் அடையாது.

இவ்வனுபவம் உண்மையாகலான் ஆன்மாவிற்கு முதலாயுள்ள சிவம் உள் நின்று உணர்த்தியும், உணர்த்தியதை உணரும்படிச் செய்தும் இவ்வகையான் மலச்சார்புகளை யொழித்து வந்ததுபோல், இனி ஞானத்தையும் அருளையும் உணர்த்தி அங்ஙனம் உணர்த்துவதை உணரும்படியாகச் செய்து, உணரும் அவ்வழியானே தன்னைச் சாரும்படிச் செய்து, தானாக்கித் தன்னருளில் நிறுத்திக்கொள்ள குருவடிவாய் வந்து அச்செயலைச் செய்யும் என்பதாம்.

இங்ஙனம் கூறிவந்ததே ஆன்மா ஞானத்தை யுணருமுறையாகலான் கருத்துரையில் "ஞானத்தினை உணருமுறை" என்றும் அதிகரணத்தில் "இவ்வான்மாக்களுக்குத் தமது முதல் தானே குருவுமாய் உணர்த்தும்" என்றும் கூறப்பட்டன.

இனி, ஆன்மா சதசத்து என்னும் பேருடையது என்று ஏழாஞ்சூத்திரத்திற் கூறி, எட்டாஞ் சூத்திரத்தில் சத்தாதற்றன்மையைக் கூறத்தொடங்கி, அசத்தாதற்றன்மைக்கு அசத்துப் பொருள் முன்னின்று ஆன்மா அசத்தாதற்றன்மையைப் பெறச் செய்ததுபோல், சத்தாதற்றன்மைக்குச் சத்துப்பொருள் வந்து நின்றால் அல்லது ஆன்மா சத்தாதற்றன்மைப் பெறுதற்குக் கூடாதாகலான், ஆன்மசைதன்னியத்தினிடத்தில் அந்நியமின்றி அநந்யமாய் நிற்கும் இயல்புடைய தமது முதலாகிய சிவம் தாமே குருவடிவாய் வருமென்றும், குருவடிவாய் வருதற்கு ஆன்மாவினிடத்து ஞானம்பெறுதற்குரிய அவாமேலிடவேண்டுமாகலான் அதனைச் செய்யவல்லது சரியை கிரியா யோகங்களன்றி வேறொன்று மின்மையான், அச்சாதனங்களின் சிறப்பு இத்தன்மைத்தென்றுங் கூறி, அதன்பின் குருவடிவாய் வரும் முதல் அவ்வான்மாவிற்கு அதனறிவு ஐயுணர்வுகளான் மயங்கிநிற்கும் நிலையினையுணருமாறு உணர்த்திப், பின் அவ்வையுணர்வுகளுக்கும் தான் வேறாகும் நிலையினைக் காணச்செய்து, அக்காட்சியானே அதுவரையில் தனக்கு ஆதாரமாய் உணர்த்திநின்ற முதல்வனது

திருவடியை (திருவருளை) அடையச்செய்யும் என்னும் முறைமையை உணர்த்துதலாம்.

எங்ஙனமெனின், சத்த முதலிய ஐவகை விஷயங்களையும் விளக்கும் கருவிகளாயுள்ள ஐயுணர்வுகள் ஆன்ம அறிவின்கண் கலந்து நிற்ப, அக்கலப்பினால் ஆன்ம அறிவு இதுவென வெளிப்படுமாறின்றி மயங்கித் தன்னை உணருமாறின்றி அவ்வையுணர்வுகளின் மயமாகவே ஆன்மா மயங்கி நிற்கும்.

இந்நிலையினையுடைய ஆன்மா சரியையாதிகளை இயற்றி வந்த தவ விசேடத்தால் மலபரிபாகம் உண்டாய், சத்திநிபாதம் வாய்ப்பெற்று. அதனால் ஞானம் பெறுதற்குரிய அவாவுண்டாக அவ்வவாவின் மயமாய் நிற்கும்.

ஆகவே, அதுகாறும் தோன்றாத் துணையாய் ஆன்மாவின் அறிவுள்ளிருந்த சிவம் குருவடிவங் கொண்டுவந்து தோன்றுந் துணையாயிற்று. அங்ஙனம் அவ்வுயிர்த் துணையாகிய சிவம் அவ்வான்மாவைத் தனது ஞானநோக்கினால் நோக்கி அதனது ஞானம் விளங்குமாறு விளக்கும் உபதேச முறையில்வைத்து, ஐயுணர்வுகள் அதனறிவைக் கீழ்ப்படுத்தித் தம் அறிவினையே விளக்கி நின்றது போல, அவ்வுபதேச முறையில் விளங்கவரும் விளக்கமானது அவ்வையுணர்வுகளையுங் கீழ்ப்படுத்தி, அவ்வுணர்வுகளின் சார்பால் மயங்கிக் கிடந்த ஆன்மவறிவினைப் பலநிறங்களின் சார்பிலிருந்த படிகமானது உச்சிப்பகலில் அச்சார்பில் நின்றும் நீங்கித் தனது ஒளியுடன் விளங்கும் சுத்தபடிகம்போல், விளங்கச்செய்யும்.

அது செய்யவே, தன் (ஆன்மா)னறிவைக் கீழ்ப்படுத்தி நின்ற ஐயுணர்வுகளும் கீழ்ப்பட்டு நிற்ப, தன்னறிவு அவ்வுணர்வுகளுக்கு வேறென விளக்கிய அப்பேரறிவே தனக்காதாரமாக அவ்வாதாரத்தையே அணைந்திருக்கச் செய்யும்.

எதுபோலெனின், ஒருவன் ஏறியிருந்து ஆடுதற்கு ஆதாரமாயிருந்த ஊசல் கயிறற்றால் அவ்வூசலுக்கு ஆதாரமாவது தரையையன்றிப் பிறிதில்லை. ஆகவே அவ்வூசலானது அத்தரையையே அணைந்து நிற்கும். அதுபோல் ஆன்மவறிவு அப்பேரறிவில் அணைந்து நிற்கும் என்பதாம்.

இவ்வெட்டாஞ் சூத்திரக்கருத்து "ஞானத்தினை உணரு முறை" என்றதனால் அம்முறையினை ஈண்டு உணர்த்தியதென்க.

அஃதாவது, ஈண்டு எடுத்துக்கொண்ட **ஞானமுறை மூன்று.** அவை இந்திரியங்களுக்குள்ள ஞானத்தின்முறை (க) ஆன்மாவுக்குள்ள ஞானத்தின்முறை (உ) சிவஞானத்துக்குள்ள ஞானத்தின் முறை (ங) என்பனவாம்.

இந்திரியங்களுக்குள்ள ஞானத்தின் முறை: — இந்திரியங்களின் உணர்வு பஞ்சேந்திரியங்களின் வழிமேய ஐயுணர்வுகளாக இருக்கை.

ஆன்ம ஞானத்தின் முறை :— தன்னறிவு தனியே விளங்குவதற்கின்றி அந்த ஐயறிவோடு கலந்து அவ்வறிவுகளாக இருக்கை.

சிவஞானத்தின் முறை:— சிவமானது, ஆன்ம அறிவைக் கீழ்ப்படுத்தி மேம்பட்டிருந்த ஐயுணர்வுகளைக் கீழ்ப்படுத்தி, அவ்வுணர்வுகளின்வழி மயங்கிக் கிடந்த ஆன்ம அறிவை வேறுபடுத்தி பதிஞானத்தினால் தன்னருளை அணைவித்து சுத்தபடிகம்போல் விளக்கியிருக்கச் செய்கை.

ஒன்பதாஞ்சூத்திரம்

சாதிக்கும் முறை

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே.

(க-ரை) ஆன்ம சுத்தி பண்ணுமாறு உணர்த்துதல்.

(வி - ப்) ஈண்டு **சுத்தி** என்றதனால் சுத்திக்கு ஏதுவாய் நின்ற இவ்வான்மாவிற்குத் **தத்துவரூபம் தத்துவதெரிசனம் தத்துவசுத்தி ஆன்மரூபம் ஆன்மதெரிசனம்** எனனும் ஐந்தும் ஆமாறு என்று அறியவருகின்றது.

எங்ஙனமெனின், ங-ம் சூத்திரத்தில் "மாயாவியந்திரதநு" என்றதனால் அவற்றின் உருவம் தெரியவந்தது. ஆகவே **தத்துவரூபம்,** "என துடல் என்றலின்" "ஐம்புலன் அறிதலின்" "ஒடுக்கம் அறிதலின்" "கண்படில் உண்டிவினையின்மையின்" என்று தொடக்கமாகக் கூறிப்பின் ரு-ஆம் சூத்திரத்தில் "ஐயுணர்வுகள் ஆன்மாவால் உணரும்" என்று கூறியவாற்றான் இப்பொருளுணரவந்து தத்துவ சமூகங்களெல்லாம் சடமென்று அறிய

வாவே தத்துவ தெரிசனமும், ஏழாஞ் சூத்திரத்தில் சத்தினிடத்து அசத்துப் பிரகாசியாதென்றும் அசத்தினுக்கு உணர்வின்று என்று கூறியதனால் உணரவந்த பொருளான் தத்துவ சுத்தியும் பின் 'இருதிறன் அறிவுளது'' என்று கூறிய அதனால் ஆன்ம ரூபமும், அ-ஆம் சூத்திரத்தில் ''இவ்வான்மாக்கள் ஐயுணர்வுகளான் மயங்கித் தம்மையுணரா'' என்றதனால் ஆன்ம தெரிசனமும் ஆனமுறைமை விளக்கினமையான், ஈண்டு ''ஆன்மசுத்தி பண்ணுமாறு'' என இவ்வொன்பதாஞ் சூத்திரத்திற்குக் கருத்துரை கூறியதென்க.

எனவே ஆன்மா தன்னறிவு தோன்றாது ஐயுணர்வுகளின் வழிமயங்கிக்கிடப்ப, அம்மயக்க நிலையினை நீக்கித் தன்னறிவு வேறெனக்காணுமாறு செய்தது சிவஞானம். அச்சிவஞானம் அருளிலிருப்பதெனவும் அவ்வருள் சிவனுற்றிருப்பதெனவும் முன்னமே ஞானநிலையைக் கூறுமிடத்துக் கூறியிருக்கின்றோம்.

ஆகவே அவ்வருளைப் பெறுதற்கு ஆன்ம சுத்தி இன்றி அமையாதாகலான் அச்சுத்திபண்ணுவது இதுவென்பதனை உணர்த்துதலாம்.

ஆன்மசுத்தியைப் பண்ணுவது **ஸ்ரீ பஞ்சாக்கரம்** என்ப. இதுதான் அகளமாய் யாரும் அறிவரிது. அப்பொருளாகிய அம்பலக்கூத்தன் குருவடிவாய் வந்து, ஆன்ம சுத்தியைப்பெற்றுச் சிவமாக வேண்டினார்க்குச் **சிவமாகத் தந்தபொருளாம்.**

இப்பஞ்சாக்கரம் **மூவகைப்படும் :**—நகாரமுதலாக உச்சரிப்பதாகிய பஞ்சாக்கரத்தைத் **தூல** பஞ்சாக்கரமெனவும், சிகாரமுதலாக உச்சரிப்பதாகிய பஞ்சாக்கரத்தைச் **சூக்கும** பஞ்சாக்கரமெனவும், நகார மகாரங்களாகிய இரண்டெழுத்தினையும் விட்டு ஏனைய மூன்றெழுத்துள் ஆன்ம எழுத்தை ''வாசியிடை நிற்க வழக்கு'' என்றபடி இடையே வைத்துச்சரிப்பதாகிய பஞ்சாக்கரத்தை **அதிசூக்கும** பஞ்சாக்கரமெனவும் கூறப்படுமென்க.

இம்மூவகையாயுள்ள பஞ்சாக்கரந்தான் ஆசிரியரால் தரத்தகும் பொருளெனப்படும். அப்பொருளை ஆசிரியர் தருமுறை எவ்வண்ணமெனின், மாணவர்களைச் **சிரவணமுறையில்** உள்ளாக்குங்காலத்து நீ மலத்தடையை நீற்றலான் நமஸ்காரம் சிவனுக்கென்பாய் என்று **தூல** பஞ்சாக்கரத்தை உபதேசமுறையில் தந்தருளுவர். பின் **சிந்தனை முறையில்** நிற்கச் செய்யுங்காலத்து நீ நமஸ்காரம் சிவனுக்கென்ற அச்சிவனுக்கு மலமில்லை என்று

சிந்தனைசெய்ய **சூக்கும** பஞ்சாக்கரத்தை உபதேச முறையில் தந்தருளுவர். அவ்வுபதேச வழியே அம்மாணவகன் **சிந்தனை முறையில்** நிற்க மலமற்றவராகிய அச்சிவனார் அவன் சித்தத்துள் நிலைபெற்று நின்று அவனை மலம்வந்து சாராவண்ணம் அவனைத் தன்னிடையே வைத்துத் தான் தன்னருளோடு முன்னும் பின்னும் காத்து ஆன்ம சுத்தியைத் தருவர் என்று தெளிய **அதிசூக்கும** பஞ்சாக்கரத்தை உபதேசமுறையால் தந்தருளுவர்.

இவ்வுண்மை தோன்றவே ஆன்ம சுத்தியைப் பண்ணுமாறு என்று கருத்துரை கூறியதென்க.

சாதன இயல் முற்றிற்று.

பத்தாஞ்சூத்திரம்

பாச நீக்கம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

(க - ரை) பாசக்ஷயம் பண்ணுமாறு உணர்த்துதல்.

(வி - ம்) மாணவகன் சிந்தனை முதிர்வான் தன்னுள்ளே நிற்கப்பெற்ற சிவத்தோடு ஏகனாகி நிற்றலாகிய நிட்டையைக் கூடுங்காலத்து அவனைத் தன்னுள் நிறுத்தி முன்னே நிற்குஞ் சிவம் அதுகாறும் அவனுள் செருக்குற்றுநின்ற யான் எனதென்னும் அவ்விரண்டும் அற்றுப்போம்படிச் செய்யும்.

அஃதேபோல் இங்குளிவாங்குங் கலம்போல இவனது **உடம்பு நிற்கும்** ஆகலான் அவ்வுடம்பு **நிற்குமளவும்** அது கொண்ட **வினைப்பயனும்** அதனை அனுபவித்தற்குத் துணைக் காரணமாய் உடன் நிற்கும் **முயற்சியும்** ஒருவாற்றானும் **நீங்கலாகா.** ஆகவே, பின் நிற்குஞ் **சிவம்** அவ்வினைப்பயனும் முயற்சியும் நீங்கும் வண்ணம் அவ்விரண்டினும் தன்னருட் **செயல் நிற்றலை விளக்கி** அவ்வருளில் மாறாது நிற்பதாகிய **பணியில் நிற்கச் செய்யும்.**

இன்னனங் கூறிவந்ததனல் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மாணவகன் பரமேஸ்வரனிடத்து ஏகனுகி நிற்றலாகிய நிட்டை கூடப்பெறினும் இங்குளி (பெருங்காயம்) வாங்குங்கலம்போல் பாசகாரியமாகிய உடம்பு நிற்குமெனவும் அது நிற்கவே யான் எனதென்பதாகிய செருக்கும் அதுபற்றிவரும் வினைப்பயனும் முயற்சியும் ஆகிய அஞ்ஞான கன்மங்கள் எனப்படும் பாசங்களும் ஒரோவழி மெலிதாய்த் தாக்குமெனவும், ஆகவே அப்பாசங்கள் கூடியிருக்குமாயின் ஏகனுகி நிற்றலாகிய நிட்டை கூடுவதனல் பரமேஸ்வரனது ஸ்ரீ பாதத்தை அணைதலாகிய பயன் கூடாதாக லான் அப்பரமேஸ்வரன் அவ்வான்மாவைத் தனது நடுவில் வைத்துக்கொண்டு தான் முன்னிருந்து செருக்குற்றுவரும் யான் எனதென்னும் பாசத்தையும், பின்னிருந்து அஞ்ஞானகன்மம் என்னும் பாசத்தையும் க்ஷயம் பண்ணுகின்றன் எனவும் அறி வித்தவாறும்.

இவ்வுண்மை தோன்றவே பாசக்ஷயம் பண்ணுமாறு உணர்த்துதல் என்று கருத்து கூறிற்று.

பதினோராஞ்சூத்திரம்

சிவப்பேறு

காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

(க - ரை) பரமேஸ்வரனது ஸ்ரீ பாதங்களை அணையுமாறு உணர்த்துதல்.

(வி - ம்) ஏகனுகி நிற்றலாகிய நிட்டை கூடினேர்க்கு உள்ளத்துள் நின்று முனைத்து எழுவதாகிய யான் எனது என்னும் பாசத்தை முதல்வன் முன்னும் பின்னும் இருந்து க்ஷயமாம் வண்ணம் பண்ணிப் பின் அம்முதல்வன் கணும் உபகாரத்தை மேற்கொண்டிருப்பவனுகலான் தன்னையே கண்டு நிற்கும் அவனுக்குவரும் வினைப்பயனையும் அதுபற்றிய முயற்சியையும் தானே கண்டுணர்ந்து அவ்விரண்டான் வரும் சுகதுக்கானுபவங் கள் அவனைச் சாரச்செய்யாது அவனைத் தன்னோடு ஏகனுகி

நிற்றலாகிய அத்துவித நிலையை மறவாது கடைப்பிடிக்கச்செய்து அவனது **அறிவைத்** தனது உபகாரத்தை அறிவதிலும், **இச்சை**யைத் தன்னன்பு செய்தலிலும், **தொழிலைத்** தன் திருவடியைக் கூடுதலிலும், முனைத்து நிற்கச்செய்தலாகிய **பத்தியில் நிறுத்திச்** சிவானந்தானுபூதியில் தலைப்படும்படி **அருளுவன்.**

இவ்வுண்மை தோன்றவே பரமேஸ்வரனது ஸ்ரீ பாதங்களை அணையுமாறு உணர்த்துதல் என்று கருத்து கூறிற்று.

பன்னிரண்டாஞ்சூத்திரம்

சீவன் முத்தரது இயல்பு

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

(க - ரை) அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல்.

(வி - ம்) மேலே சொல்லியவாறு சிவானந்தானுபூதியில் தலைப்பட்டு நிற்கும் முத்தர்க்கு அந்நிலைக்கண்ணும் பிராரத்தானுபவம் உளதாம் ஆதலான் அவ்வனுபவம் தலைப்படும்பொழுது மேலே சொல்லிவந்த நிட்டை கலைந்து பிரபஞ்சத்தை நோக்க நேரும்; நேருங்கால் சீவன்முத்தி நிலையெனப்படும் அந்நிலையில் திருவடியை யடைந்திருக்கும் நிட்டையில் தொழிற்பட்டிருந்த அறிவு இச்சை செயல்கள் மூன்றும் ஒவ்வொரு சமயத்தில் புறவிஷயங்களில் செல்லவரும், அங்ஙனஞ்செல்லவரினும், வேம்பினைத் தின்றபுழு கருப்பஞ்சாற்றினிடத்துவரினும் அச்சாற்றினை நோக்காது அவ்வேம்பினையே நோக்குமாறு போல நோக்காது, அவ்வறிவு இச்சை செயல்கள் இன்ன இன்ன இடங்களில் செல்லவரும் என்பதனை இக்கருத்துரை உணர்த்துதலாம்.

எங்ஙனமெனின் அறிவு **செல்லுமிடம்** பாசஞானமாகிய வாக்கிற்கும் பசுஞானமாகிய மனத்திற்கும் எட்டாதவனாய்ப் பதிஞானத்திற்கு எட்டினவனாய் (அஃதாவது பதிஞானத்தினால் விளையும் அன்பிற்கு எட்டினவனாய்) வழிபடுதற் குரியவனாய்

னிற்கு முதல்வன் தனது வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டும்படி சிவாலயத்தை இடமாகக்கொண்டிருத்தலின் அவ்வாலயமேயாம்.

இனி **மூர்ச்சை செல்லும் இடம்** சிவனடியார் உள்ளத்தில் சிவன் தயிரில் நெய்போல விளங்கி அன்புருவாய் நின்று அவர்களையும் இன்புருவாக்கி இனித்திருத்தலின் அச்சிவனடியாரேயாம்.

இனிச் **செயல் செல்லும் இடம்** காமக்கிழத்தியாது வடிவிற் காணப்படும் ஆடை, சாந்து, ஆபரணம் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறுபோல, மெய்யுணர்வுடையாரைத் திருவேடமானது வசீகரித்து இன்பத்தினை விளைவிக்கும் இயல்புடையதாகலின் அத்திருவேடமேயாம்.

இதனால் நிட்டையின் வழியே சிவானந்தானுபூதியைப் பெற்ற முத்தர்கள் அன்புவிளையும் ஞானத்தினை உணராது பாசத்தினையுணர்த்தும் மும்மலங்களொடு கலந்து வாழார் என்றும், அஞ்ஞானத்தை உணர்த்துவாரது கூட்டத்தோடு இணங்கி வாழார் என்றும், சிவன் அப்பிரகாசமாகக் கிடக்கும் வேடங்களையும் இடங்களையுங் கண்டு வழிபட்டு வாழார் என்றும் உணர்த்தியவாறும்.

இங்ஙனம் வாழார் எனவே தம்மிடத்துப் பிராரத்தானுபவம் வரின் அது நிகழ்தற்குரிய அறிவு இச்சை செயல்களைச் சிவாலயத்தினிடத்தும் சிவனடியாரிடத்தும் அவரது திருவேடத்தினிடத்துமே செலுத்திப் பாச பசு ஞானங்களால் சிந்திக்கப்படாதவனாய் நின்ற பதி அம்மூவிடங்களிலும் பிரகாசமாய் நிற்றலையுணர்ந்து சிந்தனைக் கண்டு அபரா அன்பினால் வழிபடும் வழிபாட்டினால் அப்பிராரத்த னுபவத்தை வென்று சிவானந்தானுபூதிமான்களாகவே நிட்டையின்கண் மாறாது வாழ்வர் என்றும் அறிவித்ததாமென்க.

பயனியல் முற்றிற்று.

சிறப்பியல்பு முற்றிற்று.

சிவஞானபோதக் கருத்துரை விளக்கம் முற்றிற்று.

சிவஞானயோகிகள் திருவடி வாழ்க.

வாழ்த்துரை

எல்லாரும் இன்புற எண்ணுவோய் வாழி

அன்புநெறி யாஞ்சைவஞ் சிறக்கக் காஞ்சி
ஆலால சுந்தரரை தொண்டே போல
அன்னாரின் பெயரனும் வல்லி நாத!
ஆண்டவனின் நற்பணியே குறிக்கோளாக
இன்றமிழில் தேர்ச்சிமிகு புலவர் தன்னை
இனிமையுடன் வருவித்துப் பலபேர் உய்ய
நன்மருந்தாம் இறைவனது பெருமையெல்லாம்
நலமுடனே உரைக்கவழி செய்வோய்! வாழி.

நல்லாண்டாம் அறுபதாம் நிறைவு நாளில்
நலமுடனே பல்லாண்டு வாழ்க என்றே
உள்ளமகிழ் வோடுயர்ந்தோர் வாழ்த்துகின்றார்
உயர்ந்த நற் சைவநெறி உலகில் ஓங்க
ஒல்லுவகை இறைபணியே புரிந்தோய்! வாழி
ஒண்புலவர் இராமநாத அடிகள் போல
நல்லபிறை ஆயிரத்தின் மேலே கண்டே
நற்றமிழ்போல் இறையருளால் நீடு வாழ்க.

முத்து முருகன், ஆசிரியர், சைதைத் தமிழ்ச்சங்கம்,
சைதாப்பேட்டை, சென்னை-15.

வாழ்த்து

உலகம் போற்றும் உயர்மத சைவம்
உயர்ந்து வாழ உழைத்த குடும்பக்
கொழுந்தே வல்லிநாத! குணக்குன்றனையோய்!
என்னருநண்ப! தமிழ்த்துணைச் செல்வ!
இன்னாள் அறுபதாம் ஆண்டு விழாவில்
எண்ணரு பெரியோர் எல்லாரும் பல்லாண்டு
பாட பரமனருளால் பல்லாண்டு வாழி!
மனையும் மக்களும் மாண்புடன் வாழி!
திலகவதி யனைய சிவஞானவதியால்
அப்பரே போன்று அவ்வழியில் வளர்ந்தோய்!
ஆலால சுந்தரரும் ஏகாம்பர சிவயோகியும்
ஆசியே கூற ஆண்டுபல் வாழியே!

—திரு. வி. நடேசனார்